[1st September 1959

கையெழுத்தும் வாங்கப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஓரளவு குறைகள் நீங்கும் என்று தோன்றுகிறது.

SRI K. S. G. HAJA SHERIFF: May I know whether the persons who are put in charge of revision of electoral rolls are paid any allowances or are they asked to work free?

THE HON. SRI C. SUBRAMANIAM: They are paid some allowance.

Artificial Insemination Centres

* 58 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவில் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் நிலையங்கள் எத்தனை நிறுவப்பட்டுள்ளன ?

(ஆ) செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் சிகிச்சை எத்தனை தடவை செய்யப்பட்டன ?

(இ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்குள்ளாக மேற்படி ஜில்லாவில் இன்னும் எத்தனை நிலையங்கள் திறக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Nineteen.

(*b*) 302,833.

(*c*) Six.

SRI P. G. MANICKAM: எந்த எந்த ப்ளாக்குகளில் கால்நடை ஆஸ்பத்திரிகள் இல்லாமல் இருக்கிறதோ அங்கேயெல்லாம் கால்நடை ஆஸ்பத்திரிகளை நிறுவுவதற்கு சர்க்கார் கவனம் செலுத்துமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எங்கேயெல்லாம் வசதிகளைப் பெருக்க வேண்டுமோ அங்கே யெல்லாம் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

SRI M. P. SUBRAMANIAM: இந்தக் கேள்வியில் கால் நடை என்று குறிப்பிடப்படவில்லை. அதனால் மனிதர்களுக்கும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன் (சிரிப்பு).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது சாத்தியம் இல்லை என்பது கனம் அங்கத்தினருக்கே நன்றாக தெரியும்.

Game hunters

MR. SPEAKER: கேள்வி 59. கனம் அங்கத்தினர் இடத்தில் இல்லாததால் கேள்வியும் பதிலும் சட்டசபை நடவடிக்கையில் அச்சிடப் படும்.

* 59 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many licensed game hunters are there in the State;

(*b*) how many deer and other wild animals have been shot by them last year;

1st September 1959]

(*c*) how many cases are on record of a licence-holder shooting more than the quota; and

(*d*) whether it is a fact that poachers are responsible for the cause of depletion of forests?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) There are 261 licensed game hunters in the Madras State.

(*b*) Two deer and 190 wild animals were shot in the reserved forests and reserved lands of Madras State during 1957–58.

(*c*) There is no recorded evidence.

(*d*) It is not a fact that poachers resort to illicit cutting of trees and cause depletion of forests.

Sunnhemp

* 60 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பிளாக்கில் (சன் ஹெம்ப்) சணல் மிகுதியாகப் பயிர் செய்யப்படுகின்றதா ?

(ஆ) அங்கு உண்டாகும் சணலைக்கொண்டு சிறு கைத்தொழில் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) There is no such proposal at present.

SRI A. VEDARATHNAM: சன் ஹெம்ப், இதை வைத்துக் கொண்டு என்ன செய்ய அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: திருநெல்வேலி மாவட்டத்தில் ஷெர்மாதேவி, கோபாலசமுத்ரம் போன்ற இடங்களில் இந்த நாணல் கயிற்றைக்கொண்டு ஜமக்காளங்கள் செய்ய பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிற நிலையங்களில் எவ்வாறு வேலை நடைபெறுகின்றன, நாணல் எப்படி உற்பத்தியாகிறது அதன் மூலம் செய்யப்படுகிற ஜமக்காளங்கள் எவ்வாறு இருக்கிறது என்பதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்த பிறகு கனம் அங்கத்தினர் கூறுவதுபோல் வேதாரண்யத்தில் அமைப்பதைப்பற்றியும் யோசிக்கப்படும்.

The Representation of People Act

* 60-A *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether, in conformity with his suggestion on the floor of the House on 7th May 1957, the Government have represented to the Union Government to amend the Representation of the People Act regarding the maximum amount that any candidate standing for the Assembly seat may spend; and

(*b*) the reply received thereto?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) The matter has since been taken up with the Govenrment of India, and it is under their consideration.